**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.95/2024 - PW-2**

| | |
|---|---|
| Name | திரு.லோகய்யா |
| Husband/Father Name | முனுசாமி நாயுடு |
| Village /Area | வடமாம்பாக்கம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | ஆசிரியர் (ஓய்வு) |
| Age | 64 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 20.11.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். கடந்த 15.02.2010 அன்று நான் பள்ளியில் ஆசிரியராக பணியில் இருந்த போது எனது மனைவி உடல் நிலை சரியில்லாமல் C.M.C மருத்துவமனைக்கு சென்றிருந்தார். எனது வீட்டில் எனது மாமியார் லலிதா தனியாக இருந்த போது 02.30 மணிக்கு தொலைபேசி மூலம் எனது வீட்டில் யாரோ நுழைந்து எனது மாமியாரை தாக்கி நகைகளை கொள்ளை அடித்து சென்றதாக எனக்கு தகவல் வந்தது.

பிறகு நான் வீட்டிறகு சென்று பார்த்த போது வீட்டில் உள்ள பீரோ மற்றும் பொருட்கள் களைக்கப்பட்டிருந்தது எனது மாமியாருக்கு தலை மற்றும் கைவிரலில் இரத்த காயம் ஏற்பட்டிருந்ததது. எனத மாமியார் அணிந்திருந்த கம்மல், தாலி சரடு கொள்ளையடித்து சென்றதாக எனது மாமியார் கூறினார். பிறகு எனது மாமியாரை அரசு மருத்துவமனை அரக்கோணத்திற்கு அழைத்து சென்று சிகிச்சை

பெற்றோம். பிறகு அரக்கோணம் நகர காவல் நிலையம் சென்று என் மாமியார் சொல்ல நான் புகாரை எழுதினேன். அவரிடம் படித்து காண்பித்து அவர் சொன்னபடி இருந்ததால் அவர் தெலுங்கில் கையொப்பம் செய்து புகார் கொடுத்தேன். அவர் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை,

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.20 19:03:40 +0530

II Additional District and Sessions Judge,

Arakkonam.